Clr.No.19

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | Case No. CC.40/2007 |
| Sessions | : | |
| | | Prosecution |
| Deposition of witness for | : | PW 1 |
| Name | : | மாலதி |
| Father's/Husband's Name | .. | சங்கர் |
| Village | | |
| Taluk | .. | |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | 48 |

Date: 16.12.2024

(Solemnly affirmed before this court under act X of 1969)

எதிரி 3 & 4 நீதிமன்றத்தில் ஆஜர்.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது கொடுங்கையூர் பகுதியில் வசித்து வருகிறேன். கேட்டரிங் மற்றும் தையல் தொழில் செய்து வருகிறேன். எதிரிகள் இருவரும் என் கணவரின் சகோதரிகள் ஆகும். கடந்த 1992 மார்ச் மாதம் எனக்கும் என் கணவருக்கும் திருமணம் நடந்தது. என்னுடைய பெற்றோர் திருமணத்தின் போது 8 சவரன் நகை கொடுத்தார்கள். திருமணம் ஆன நாள் முதல், என்னுடைய கணவர் கொடுத்துவிட்டு என்னிடம் வந்து சண்டையிடுவார். சின்ன சின்ன விஷயங்களுக்கு என்னிடம் சண்டை

இட்டுக் கொண்டு இருப்பார். உணவு சரியில்லை என்றாலும் என்னிடம் சண்டை இடுவார். தப்பான எண்ணத்துடன் என்னிடம் எப்பொழுதும் சண்டையிட்டு வருவார்.

2. என்னுடைய கணவர் என்னை அடித்ததில் என் மூக்கில் காயம் ஏற்பட்டு ரத்தம் வந்துள்ளது. மூக்கினுள் ஒரு நரம்பை எடுத்துவிட்டார்கள். தலையில் காயம் ஏற்பட்டு தையல் போட்டு உள்ளார்கள். என் கணவரின் குடும்பத்தினர் அவருக்கு மேற்படி கொடுமைகள் செய்யும் பொழுது அவருக்கு ஆதரவாக இருந்தார்கள். நான் புகார் கொடுத்தபொழுது, காவல் உதவி ஆணையர் அலுவலகத்தில் வைத்து, எதிரிகள் இருவரும் என்னை அடித்தார்கள்.

3. என்னுடைய கணவர் அசோக் லேலண்ட் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். அவர் வேலையை விட்டு விட்டார். அப்போது அவருக்கு பணம் கொடுத்திருந்தார்கள். அந்த பணம் வங்கியில் இருந்தது. அதற்குண்டான காசோலை, என் கணவரின் பையில் இருந்தது. என்னுடைய மாமியார் அதனை எடுத்து என்னிடம் கொடுத்து, நாத்தனார் இடம் கொண்டு போய் கொடு என்று கூறினார்கள். நான் அதனை எடுத்துக் கொண்டு எதிரிகளிடம் கொடுத்து, அந்த பணத்தை என்னுடைய குழந்தைகளின் பெயரில் வைப்பீடு செய்யுமாறு கூறினேன். அவர்கள் என் கணவரை அழைத்துக் கொண்டு வங்கிக்கு சென்று காசோலையை செலுத்தினார்கள். அதன் பின்னிட்டு, நேரம் ஆகும் என்று என் கணவரை அனுப்பி விட்டார்கள். அந்த மொத்த பணத்தையும் அவர்களை எடுத்துக் கொண்டார்கள்.

4. என் மாமனார் இறந்த பிறகு, என் பிள்ளைகளை என்னுடைய கணவரின் வாரிசுகளாக காட்டவில்லை. எதிரிகள் இருவரும் மட்டுமே வாரிசு என்று காட்டி அவருடைய சொத்துக்கள் அனைத்தையும் எடுத்துக்

கொண்டார்கள். என் கணவரின் பெயரில் குழந்தை இயேசு கோவில் பின்புறம் உள்ள இடத்தை அதன் பத்திரத்தை எதிரிகள் அபகரித்துக் கொண்டார்கள். காவல் உதவி ஆணையர் அவர்களிடம் புகார் கொடுத்த பொழுது, என்னையும் என்னுடைய அம்மா இரண்டு பேரையும் எதிரிகள் அடித்தார்கள்.

5. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த புகார். மேற்படி புகார் காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (புகார் அ.சா.ஆ.1 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது). போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-

6. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் யாரும் ஆஜராக இல்லை. அதனால் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Clr.No.19

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

------

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | Case No. CC.40/2007 |
| Sessions | : | |
| Deposition of witness for | : | Prosecution PW 2 |
| Name | : | மல்லிகா |
| Father’s/Husband's Name | .. | லோகநாதன் |
| Village | | |
| Taluk | .. | |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | 77 |

Date : 16.12.2024

(Solemnly affirmed before this court under act X of 1969)

எதிரி 3 & 4 நீதிமன்றத்தில் ஆஜர்.

முதல் விசாரணை:-

1. நான் கொடுங்கையூர் பகுதியில் வசித்து வருகிறேன். வேலைக்கு செல்லவில்லை வீட்டில் தான் இருந்து வருகிறேன். மாலதி என்பவர் என்னுடைய மகள். 1992 ஆம் வருடம் என்னுடைய மகள் மாலதி என்பவரை என் உறவினர் மகன் சங்கர் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தோம். எதிரிகள் இருவரும் என் மகளின் நாத்தனார். இருவருக்கும் முதல் குழந்தை பிறக்கும் வரை, என்னுடைய மருமகனுக்கு வேலை இல்லாமல் சற்று கஷ்டப்பட்டு கொண்டு இருந்தார். 1995 ஆம்

வருடம் அசோக் லேலாண்டில் அவருடைய அப்பா பார்த்த வேலை அவருக்கு கிடைத்தது.

2. திருமணமான நாள் முதல், இருவருக்கும் சண்டை வந்து கொண்டிருக்கும். என்னுடைய மருமகன், மது அருந்திவிட்டு என் மகளிடம் சண்டையிடுவார். வேலைக்கு சென்று விட்ட பிறகு, சம்பளம் பெற்றவுடன், 20 நாட்களுக்கு அவர் வீட்டிற்கு வர மாட்டார். அதன் பிறகு தான் அவர் வருவார். அதைப்பற்றி கேட்டதால், என் மகளின் மூக்கு மற்றும் மண்டையை உடைத்தார்கள். அவரிடம் பலமுறை அதைப் பற்றி கேட்ட பொழுது, அவர் பதில் ஏதும் கூறவில்லை.

3. இதைப் பற்றி நான் அவரிடம் கேட்டபோது, என்னுடைய மருமகன் என்னை அடித்தார். அவருடைய அம்மா மற்றும் அவருடைய சகோதரிகள் என்னிடம் சண்டையிட்டார்கள். என்னுடைய மருமகன் வேலையை விட்டு விட்டார். அதைப்பற்றி கேட்டபொழுது, என்னுடைய மகளின் கழுத்தில் மிதித்து விட்டார்கள். கழுத்தில் இருந்த தாலி சரணை அறுத்து விட்டார்கள். அதன் பிறகு தான் என்னுடைய மகளை நாங்கள் அழைத்து வந்தோம். என் மருமகனுக்கு வேலையிலிருந்து வந்த பணத்தை, அவரிடம் இருந்து காசோலையை பெற்று அந்த பணத்தை எதிரிகள் இருவரும் எடுத்து விட்டார்கள். மொத்தம் 3,65,000/- தை, என் மகளின் பெரிய நாத்தனாரிடம் கொடுத்து குழந்தைகளின் பெயரில் வைப்பீடு செய்யுமாறு கூறியுள்ளார். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. போலீசார் என் மகளை விசாரணை செய்தார்கள். என்னை விசாரணை செய்யவில்லை.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-

4. வழக்கறிஞர் யாரும் ஆஜராக இல்லை. அதனால் குறுக்கு விசாரணை செய்யவில்லை.